**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**

**பாராளுமன்றம்**

---

# 1988 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்பு (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


1988 ஆம் ஆண்டு திசெம்பர் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்பு (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஓ 35/86

1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி நான்காம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாருன, (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்புச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— — 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "அத்தகைய வீட்டை உரித்து மாற்றலாம்" என்னும், சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வீட்டை, விற்பனே, கொடை அல்லது வேறு வகையாக உரித்து மாற்றலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "விற்கப்படலாம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "உரித்து மாற்றப்படலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திநான்காம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாருன முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "காலத்தினுள்ளாக உரித்துமாற்றப்படாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காலத்தினுள்ளாக விற்பனே, கொடை அல்லது வேறு வகையாக உரித்து மாற்றப்படாது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளினுல், முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்குமாக, 1973, சனவரி 13 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க வீடுகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலாக ஓர் ஆளினுல் சொந்தமாக வைத்திருக்கப்படுவதும், — திருத்தத்தின் கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்.

(அ) கொடை என்ற வகையாக ; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய ஆள் எக்காலப்பகுதியினுள் அத்தகைய வீட்டை உரித்துமாற்றலாமோ அக்காலப் பகுதியினுள்,

அவ்வாளினால் உரித்துமாற்றப்பட்டதும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் அல்லது 12அ என்னும் பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்கு அடுத்துப் பின்னர் கைமாற்றப்பட்ட, அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் அதுதொடர்பில் விற்பனைக்கான உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டுள்ள ஒரு வீடாக இராததுமான வீடொன்று, முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காக, முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உரித்துமாற்றப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.